பக்கங்கள் 20+9

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 05 புதன்கிழமை 21.08.2024 | அதிர்வு 20

## ரணிலுடன் இணைந்த இராஜாங்க அமைச்சர்



வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### ரணிலுக்கு ஆதரவளிக்கும் நோக்கில்

# எம்.பி. பதவியை துறந்தார் தலதா

ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள, எம்.பி. பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தாலும் தனது அரசியல் பயணம் தொடரும் என்று அவர் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் நோக்கிலேயே அவர் இந்த முடிவை எடுத்துள்ளார்.

"ஐக்கிய தேசியக் கட்சியைப் பிளவுபடுத்தியமை தொடர்பில் எனக்கு இன்றளவிலும் கவலை உள்ளது. நாடாளுமன்ற உறுப்புரிமை கிடைக்கப் பெற்றிருந்தாலும் அந்தக் குற்றம் மனதை வதைத்துக்கொண்டிருக்கின்றது." - என்றும் தலதா குறிப்பிட்டார்.



## தலதாவின் இடத்துக்கு பரணவிதான

ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்திய தலதா அத்துகோரள இன்று தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்துள்ள நிலையில், 04



## மனுஷவின் இடத்துக்குப் பந்துலலால் இன்று எம்.பியாகச் சத்தியப்பிரமாணம்

நாடாளுமன்ற உறுப்பினராக பந்துலலால் பண்டாரிகொட இன்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் சத்தியப்பிரமாணம்செய்துகொண்டதன்பின்னர்நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் 04

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# வைத்தியரின் அலட்சியத்தால் பிறந்த குழந்தை உயிரிழந்தது

## வவுனியா பொலிஸில் தந்தை முறைப்பாடு

(கே.வசந்தன்)

வவுனியா வைத்தியசாலை வைத்தியர் ஒருவரின் அலட்சியத்தால் தனது குழந்தை பிறந்து இறந்துள்ளது என்று குழந்தையின் தந்தையால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் இன்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மரணித்த சிசுவின் தந்தையார் தெரிவிக்கும்போது,

“வவுனியா, செட்டிகுளம், பிரமனாலங்குளம் பகுதியில் வசிக்கும் நாம் எனது மனைவியைப் பிரவசத்துக்காகக் கடந்த 17 ஆம் திகதி வவுனியா வைத்தியசாலையின் 7 ஆம் விடுதியில் அனுமதித்திருந்தேன். மறுநாள் அவருக்கான மருந்துகள் வழங்கப்பட்ட நிலையில் அவரது பன்னீர்குடம் உடைந்திருந்தது. இதனைத் தாங்க முடியாத எனது மனைவி அங்குள்ள தாதி ஒருவருக்கு விடயத்தைத் தெரிவித்திருந்தார். இதன்போது அங்கு கடமையில் இருந்த வைத்தியர் ஒருவர் தொலைபேசியைப் பயன்படுத்திக் கொண்டு, அது தொடர்பாக கவனமெடுக்காமல் அது ஒரு பிரச்சினையுமில்லை என்று தெரிவித்திருந்தார். பின்னர் வலிக்குரிய மருந்தை மனைவிக்குக் கொடுத்துவிட்டு உறங்குமாறு அவர்கள் தெரிவித்திருந்தனர்.



மறுநாள் வைத்தியசாலைக்கு வந்த வைத்திய அதிகாரி ஒருவர் சீசர் செய்து குழந்தையை எடுத்திருக்கலாம்தானே எனக் கடமையில் இருந்த வைத்தியரைப் பேசியிருந்தார். பின்னர் மீண்டும் மாலை 5 மணிக்கு எனது மனைவியை சிகிச்சைக்கூடத்துக்கு அழைத்துச் சென்றிருந்தனர்.

பலமணி நேரமாகியும் அவர் வெளியில் வரவில்லை. இதற்குள் 7ஆம் விடுதியில் குளிரூட்டி இயங்கவில்லை எனத் தெரிவித்து 5 ஆம் விடுதிக்கு எனது மனைவியை மாற்றியிருந்தனர். பின்னர் தாதி ஒருவர் தொலைபேசி அழைப்பை எடுத்து என்னை வைத்தியசாலைக்கு வருமாறு அழைத்திருந்தார். அங்கு சென்றபோது அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் எனது குழந்தையை அனுமதித்திருந்தார்கள்.

அங்குள்ள வைத்தியரிடம் கேட்டபோது, ”5 ஆம் விடுதியில் இருந்து குழந்தையை இங்கு அனுமதிக்கும்போதே உயிரில்லாத நிலைமையிலேயே தந்தனர். இருப்பினும் குழந்தையின் இதயத்துடிப்பை நாம் மீட்டுள்ளோம். எனினும், குழந்தையின் உடல் நிலையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது” – என்று தெரிவித்து குழந்தையை எனக்குக் காட்டியிருந்தனர். பின்னர் நேற்று இரவு எனது குழந்தை இறந்துவிட்டது என்று தெரிவித்தனர்.

எனவே, வைத்தியர்களின் அசமந்தப்போக்கால் எனது மனைவிக்கு நடந்த கொடுமைக்கு அவர்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும். எனக்கு நீதி கிடைக்காமல் நான் சிசுவின் சடலத்தைப் பொறுப்பெடுக்கமாட்டேன்.” – என்றார்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பாக சிசுவின் தந்தையால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக வவுனியா வைத்தியசாலையின் பணிப்பாளர் சுகுணனிடம் கேட்டபோது, “இது குறித்து உள்ளக விசாரணை இடம்பெற்று வருகின்றது” – என்று தெரிவித்தார்.




# இவ்வருடம் இதுவரை வீதி விபத்துக்களில் 1,417 பேர் சாவு!

இந்த வருடத்தில் இதுவரை 1,417 பேர் வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வருடாந்தம் சுமார் 1,000 பேர் மோட்டார் சைக்கிள் விபத்துக்களால் உயிரிழக்கின்றனர் என்று போக்குவரத்துப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்துள்ளார்.

“வருடாந்தம் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீதி விபத்துகள் நடக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் இடம்பெறும் விபத்துக்களில் மூன்றில் ஒன்று மோட்டார் சைக்கிள் விபத்து. 2023இல் வீதி விபத்துகள் குறைந்துள்ளன. 2024 ஜனவரி 1 முதல் ஒகஸ்ட் 10 வரை, 1,352 ஆபத்தான வீதி விபத்துகளில், 1,417 பேர் உயிரிழந்துள்ளனர்” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் 328 பாடசாலை மாணவர்கள் வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# ஜனாதிபதி வேட்பாளர் நுவன் போபகேயை ஆதரித்து இன்று யாழ்ப்பாணத்தில் பிரசாரம்




(எஸ்.நிதர்ஸன்)

மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நுவன் போபகேயை ஆதரித்து இன்று (21) யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இன்று காலை 09.30 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பமான பிரசார நடவடிக்கை யாழ்ப்பாணம் நகரப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மக்கள் போராட்ட முன்னணியின் நிறைவேற்று குழு உறுப்பினர் வசந்த முதலிகே, புதிய சனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள் சிலர் கலந்து கொண்டு மக்களுக்கு துண்டு பிரசுரங்களை வழங்கியிருந்தனர்.




# அலிசாஹிருக்கு அமைச்சுப் பதவி!



அபிவிருத்தித் திட்டங்களுக்கான அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சராக அலிசாஹிர் மௌலானா எம்.பியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

இன்று முதல் அமுலாகும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அலிசாஹிர் மௌலானா எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் நோக்குடன் அண்மையில் அவருடன் இணைந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இராஜாங்க அமைச்சராக இன்று பதவியேற்றார் வடிவேல் சுரேஷ்

தாம் தொழில் இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் இன்று பிற்பகல் தாம் இராஜாங்க அமைச்சராகப் பதவி ஏற்றார் என்று அவர் மேலும் மேலும் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான வடிவேல் சுரேஷ் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.



## மண்டலாய்ப் பிள்ளையார் ஆலய

# வசந்த மண்டப கும்பாபிஷேகமும் மணவாளக்கோல அபிஷேகமும்

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, முள்ளியான் மண்டலாய்ப் பிள்ளையார் ஆலயத்தின் வசந்த மண்டப கும்பாபிஷேகமும், மணவாளக்கோல அபிஷேகமும் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 9 மணி முதல் 9.30 மணி வரையுள்ள கன்னி லக்கின சுப முகூர்த்த வேளையில் வசந்த மண்டப கும்பாபிஷேகமும், முற்பகல் 11.30 மணி முதல் நண்பகல் 12 மணி வரையுள்ள சுப வேளையில் மணவாளக்கோல அபிஷேகமும் நடைபெறவுள்ளது என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

அதேவேளை, நாளை இரவு 7.30 மணி முதல் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை அதிகாலை 2.30 மணி வரை கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன என்றும் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

---

**தலதாவின்...**

இரத்தினபுரி மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் விருப்பு வாக்குகள் பட்டியலில் அடுத்த இடத்தில் உள்ளவருக்கு நாடாளுமன்றம் வருவதற்குரிய வாய்ப்பு கிட்டியுள்ளது.

அடுத்த இடத்தில் கருணாரத்ன பரணவிதான உள்ளார். அவருக்கே அந்த வாய்ப்பு கிட்டவுள்ளது.

கருணாரத்ன பரணவிதான, சம்பிக்க ரணவக்க தலைமையிலான ஐக்கிய குடியரசுமுன்னணியின்அரசியல்குழுவின் தலைவராகத் தற்போது கடமையாற்றினாலும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைபேசி சின்னத்திலேயே போட்டியிட்டார்.

**மனுஷவின்...**

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய


மனுஷ நாணயகார உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே பந்துலலால் பண்டாரிகொட இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார்.

பந்துலலால் பண்டாரிகொட கடந்த நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியிருந்தார்.

**ரணிலுடன் இணைந்த...**

இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தீர்மானித்துள்ளார்.

இந்த அறிவிப்பை இன்று ஊடகங்களிடம் அவர் விடுத்துள்ளார்.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வாக்குறுதியும் பொறுப்பும்

மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் நாடு விழுந்து, மீண் டெழுந்து வரும் இந்தச் சூழ்நிலையில் முதலாவது தேர்தலை அது சந்திக் கின்றது.

மீண்டெழும் சூழ்நிலையில் நாட்டில் முதலாவது ஆட்சி மாற்றத்துக்கு இந்தத் தேர்தல் சில சமயம் வழி கோலலாம். சில சமயங்களில் பழைய ஆட்சிக் கட்ட மைப்பே தொடரக்கூடிய சூழலும் ஏற்படலாம்.

எது, எப்படியாயினும் செப்டம்பர் 21ஆம் திகதி தேர்தலுக்குப் பின்னர் எழும் புதிய சூழ்நிலையில் நாட்டின் பொருளாதாரக் கொள்கைப் போக்கும் அணுகுமுறையும் எப்படி அமைய வேண்டும் என்ற அடிப்படையிலான ஆய்வுக் கருத்தரங்கு ஒன்று இணைய வழியில் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் நடைபெற்றிருக்கின்றது.

முன்னாள் மத்திய வங்கி ஆளுநரும் பொருளாதார நிபுணருமான இந்திரஜித் குமாரசுவாமி அதில் முக்கிய கருத்துரை வழங்கியிருக்கின்றார்.

பொருளாதார வளர்ச்சி இலக்குகள் மற்றும் ஸ்திரத்தன்மையை அடைவ தற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் காணப்பட்ட பொருளாதார கொள்கை சீர்திருத்த கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதில் அடுத்த புதிய அரசாங்கத்தின் முழக்கம் 'ஒத்த கருத்து மற்றும் நிலைத்தன்மை'யாக இருக்க வேண்டும் என கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி கூறியுள்ளார்.

அதாவது நாட்டைப் பொருளாதார நெருக்கடி இக்கட்டில் இருந்து மீட்ப தற்கு தற்போதைய அரசு சர்வதேச நாணய நிதியத்துடன் சில உடன்பாடுகளுக்கு வந்தது. அந்தப் பொருளாதாரச் சீர் திருத்தக் கட்டமைப்பிலிருந்து - அதை நடைமுறைப்படுத்துவதில் இருந்து - அது தொடர்பாக இணக்கம் காணப்பட்ட ஏற்பாடுகளில் இருந்து - இப்போது வரக்கூடிய புதிய அரசு விலகவே கூடாது என்று அவர் கோடி காட்டி இருக் கின்றார்.

இணங்கப்பட்ட உடன்பாடுகளை பின்பற்றி தொடர்வதில், இனி வரக் கூடிய புதிய ஆட்சித் தலைமையும் தடம் மாறக்கூடாது, அளித்த வாக்குறுதியை அப்படியே தொடர வேண்டும் என்பது தான் அவரின் ஒற்றை வலியுறுத்தலாக இருக்கின்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் நிறை வேற்று இயக்குநர் பாக்கியசோதி சரவணமுத்து, இலங்கை ஜனநாயக அரசியலில் ஜனரஞ்சகப் போக்கின் எழுச்சி பற்றிக் குறிப்பிட்டமையுடன், எது, எப்படியாயினும் ஆட்சிக்கு - அதி காரத்துக்கு - வரும் தரப்புகள் கொடுத்த வாக்குறுதிகளை நடைமுறையில் செய்து காட்டவில்லையாயின் அவை எதிர் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்ற யதார்த்தத்தையும் சுட்டிக் காட்டி னார்.

அதாவது ஜனரஞ்சகமாக எழுச்சி கொள்ளும் தரப்புகள், அதன் மூலம் சுலபமாக அதிகாரத்துக்கு வந்து விட முடியும். ஆனால் அதன் பின்னர் நடப் பவை பஞ்சு மெத்தை மீதான நடையாக இருக்காது. ஜனரஞ்சகத்தைப் பெறு வதற்கு - ஈட்டுவதற்கு - வழங்கிய வாக்கு றுதிகளை பின்னர் நிறைவேற்றத் தவறி னால், நேரடியாக மக்களின் எதிர்ப்பு எழுச்சியை ஆட்சி பீடம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதையே அவர் கோடி காட்டி இருக்கின்றார்.

நாட்டின் வேறு எந்த ஜனாதிபதிக்கும் கிடைக்காத பேராதரவை ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மக்கள் வழங்கினர். 69 லட்சம் வாக்கு களை அள்ளிக் கொட்டினர். அது மட்டு மல்ல, தொடர்ந்து வந்த பொதுத் தேர்த லில் சரித்திரத்தையே மாற்றி அமைக் கும் விதத்தில் மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களைக் கோட்டாவுக்குத் தந்த னர் மக்கள்.

அவ்வளவு ஜனரஞ்சகமான தலைமை அளித்த வாக்குறுதிகளை நடைமுறை யில் நிறைவேற்றாமையால் நாட்டிலி ருந்து துரத்தி அடிக்கப்பட்டது.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறப் போகின்ற தரப்பு இந்த பட் டறிவைக் கவனத்தில் கொண்டு தான் வழங்கிய வாக்குறுதிகளை நிலை நிறுத்த கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். இல்லையேல் கோட்டா வுக்கு கிடைத்த அனுபவத்தை தரப்புகள் எதிர்கொள்ள நீண்ட நாள்கள் செல் லாது.



# வடக்கு - கிழக்கில் தமிழ் பொது வேட்பாளர் ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவது ஏன்?

## கன்னி உரையில் சுயேச்சை வேட்பாளர் அரியநேத்திரன்

(மன்னார் நிருபர்)

பல தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் அமைப்புகளின் ஆதரவுடன் முன்னிறுத்தப்பட்டுள்ள வடக்கின் சுயேச்சை வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் முள்ளிவாய்க்கால் தமிழர் இனப்படுகொலை நினைவிடத்தில் தீபமேற்றி அஞ்சலி செலுத்தி, போரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டு மைதானத்தில் பொதுக்கூட்டம் ஒன்றையும் நடத்தி ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை தனது கன்னிப் பிரச்சார உரையை ஆற்றிய தமிழ் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன், இதுவரை காலமும் நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட எவரும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்கவில்லை என்பதை சர்வதேச சமூகத்துக்கும் இலங்கை அரசுக்கும் எடுத்துக் காட்டவேதான் தேர்தலில் களமிறங்கியுள்ளார் என்று வலியுறுத்தினார்.

வடக்கு– கிழக்கில் இந்த இனப்பிரச்சினை இன்னும் தீரவில்லை. கடந்த எட்டு ஜனாதிபதிகளுக்கும் வாக்களித்திருக்கின்றோம். அந்த எட்டு ஜனாதிபதிகளாலும் நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம். இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஏமாறுவதற்கு நாம் தயாரில்லை. எங்களுக்கான உரிமைப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. ஆகவே அது தீர்க்கப்பட வேண்டும் என்ற விடயத்தை சர்வதேசத்திற்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் காட்ட வேண்டும் என்ற



நோக்கில்தான் இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதின் நோக்கம் பதவி நாற்காலியில் அமர்வதல்ல. மாறாக தமிழ் மக்களின் உரிமை சார்ந்த பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படவில்லை என்பதை எடுத்துக் காட்டும் ‘குறியீடே’ தான் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

நான் ஸ்ரீ லங்கா சோசலிச ஜனநாயக குடியரசின் ஜனாதிபதியாக வருவதற்குக் களமிறங்கவில்லை. மாறாக இழந்த ஈழ மக்களின் உரிமைப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்பதை காட்டும் அடையாளமே, குறியீடே நான் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் யுத்தத்தின் பின்னர், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பில் மூன்று ஜனாதிபதிகளுடன் கலந்துரையாடிய போதும் எவ்வித பலனும் ஏற்படவில்லை என்பதையும் அவர் நினைவு கூர்ந்திருந்தார்.

இந்த நேரத்தில் தமிழ் மக்களின் ஒற்றுமை என்பது சர்வதேசத்தின் மனச்சாட்சியைத் தட்டும் வாய்ப்பாக இது அமையும். நாம் ஒற்றுமையாக இருக்கின்றோம். முள்ளிவாய்க்கால் போர் முடிவடைந்த பின்னர் நாங்கள் 15 வருடங்களாக உரிமையற்று இருக்கின்றோம். மூன்று ஜனாதிபதிகளுடன் பேசியிருக்கின்றோம். அவர்கள் எந்தத் தீர்வையும் தரவில்லை. ஆகவே உங்களுக்கு வாக்களிக்க நாம் தயாரில்லை. நாங்கள் நாங்களாகவே இந்த நாட்டில் இருக்க விரும்புகின்றோம். இணைந்த வடக்கு கிழக்கில் எங்கள் உரிமையை பெற வேண்டிய கடமை எமக்கு இருக்கிறது.

இலங்கையில் அதிகாரத்துக்கு வந்த தெற்கில் உள்ள அனைத்து சிங்கள ஜனாதிபதிகளும் தமிழ் மக்களை தொடர்ச்சியாக ஏமாற்றி வந்தமையே இம்முறை வடக்கு, கிழக்கிலிருந்து தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்குக் காரணம் என அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

புலிகளின் காலத்தில் ஐந்து ஜனாதிபதிகளாலும், அதன் பின்னர் மூன்று ஜனாதிபதிகளாலும் ஏமாற்றாப்பட்டோம். அதன் விளைவுதான் இந்த பொது வேட்பாளர் என்றும் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசிய அரசியலில் ஈடுபட்டுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஒற்றையாட்சியில் நாட்டின் பெரும்பான்மையினருக்கு மாத்திரம் செயற்படும் அரச தலைவரைத் தெரிவு செய்யும் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டுமென வலியுறுத்தி வடக்கு – கிழக்கில் பிரச்சாரத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







# பதுளை வேவல்ஹின்னவுக்கு மேற்கத்திய இசைக் கருவிகள்

(நடராஜா மலர்வேந்தன் )

‘உதவிடு உயர்ந்திடு’ என்னும் தொனிப்பொருளுடன் சமூக பணி ஆற்றும் வைஷ்ணவி நற்பணி மன்றத்தின் ஆறாவது அகவை தினத்தை முன்னிட்டுப் பதுளை வேவல்ஹின்ன தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கான மேற்கத்திய இசை கருவிகளை வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதன்போது வைஷ்ணவி மன்றத்தின் புதிய சீருடை, பாடசாலை அணி நடை இசைக் குழுவுக்கான சீருடை என்பன கையளிக்கப்பட்டன.

வேவல்ஹின்ன தமிழ் வித்தியாலய அதிபர் நடேசன் சுந்தர்ராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வைஷ்ணவி மன்ற உறுப்பினர்கள், உறவு பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.





# பனம்பொருள் உற்பத்திகளின் கண்காட்சி திருக்கோவிலில்

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச செயலகத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட சங்கமன் கிராமத்தில் பனம் பொருள் கைப்பணி உற்பத்திகள் மூலமாக வாழ்வாதாரத்தை உயர்த்தும் முகமாக இடம் பெற்ற பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கண்காட்சியும் நடைபெற்றது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனின் ஏற்பாட்டுக்கு அமைய புலம்பெயர் உறவுகளின் அனுசரணையில் சிவனருள் பவுன்டேசன் அமைப்பின் நிதிப்பங்களிப்பில் சங்கமன் கிராமத்தில் 40 பயனாளர்களுடன் வாழ்வாதார பயிற்சிநெறியானது ஆரம்பித்து வைக்கப்பட்டது.



அந்தப் பயிற்சிநெறியில் பயிற்சி பெற்ற யுவதிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் அவர்களின் பனம் பொருள் உற்பத்திகளுக்கான விற்பனை கண்காட்சி நிகழ்வும் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு பயிற்சிநெறியில் பயிற்சி பெற்றயுவதிகளுக்கானசான்றிதழ்களை வழங்கினார்.

உதவி பிரதேச செயலாளர் திருமதி எஸ்.நிருபா, கணக்காளர் ஏ.எல்.எம்.றிபாஸ், உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி அனோஜா உஷாந்த், நிர்வாக உத்தியோகத்தர் டி.மங்களா, கிராம சேவைக்கு பொறுப்பான நிர்வாக உத்தியோகத்தர் என்.கந்தசாமி, சமுர்த்தி பிரிவில் தலைமைபீட முகாமையாளர் எம்.அரசரெத்தினம், சமுர்த்திக் கருத் திட்ட முகாமையாளர் ஆர்.புண்ணிய சீலன், சிவனருள் பவுண்டேசன் அமைபபின் தலைவர் உதயன் பத்மநாதன், பயிற்சி பெற்றவர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.





# மாணவர்கள் பாராட்டிக் கௌரவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

களுவாஞ்சிகுடி பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் பாடவிதான செயற்பாடுகளில் திறமையை வெளிப்படுத்திய மாணவர்களைப் பாராட்டிக் கௌரவித்துள்ளது.

பட்டிருப்பு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பட்டிருப்பு தேசிய பாடசாலையில் பாடவிதான செயற்பாடுகளில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி சக மாணவர்களுக்கு முன்மாதிரியாக திகழ்ந்த மாணவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் எம்.சபேஸ் குமார் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.







# இலங்கைப் பொருளாதார நிலைமையில் நிழல் பொருளியல் சிந்தனைகள் தாக்கம்

## சம்மாந்துறை பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவிப்பு

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் நிழல் பொருளியல் சிந்தனைகள் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. நிழல் பொருளியல் என்பது, அரசின் கட்டுப்பாடுகளுக்கு வெளியே செயற்படும் பொருளாதார நடவடிக்கைகளாகும். இது கறுப்புப் பொருளாதாரம், சட்டவிரோத பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் அதிகரித்த ஊழல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

இவ்வாறு சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி. எ. எல் முகம்மது அஸ்லம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிழல் பொருளியல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை பல வழிகளில் பாதித்துள்ளது. முதலாவதாக, இது அரசின் வருமானத்தைக் குறைத்துள்ளது. நிழல் பொருளாதார நடவடிக்கைகள் வரியிலிருந்து விலக்கு பெறுவதால், அரசுக்குக் குறைந்த வருமானம் கிடைக்கிறது. இதன் விளைவாக, அரசுக்குப் பொது சேவைகளை வழங்குவதற்கும், அடிப்படை உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் தேவையான நிதி இல்லாமல் போகிறது.

இரண்டாவதாக, நிழல் பொருளியல் ஊழலுக்கு வழிவகுக்கிறது. நிழல் பொருளாதார நடவடிக்கைகள் பெரும்



பாலும் சட்டவிரோதமானவை மற்றும் அரச அதிகாரிகளுடன் தொடர்புடையவை. இது ஊழல் மற்றும் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி பொருளாதார நன்மைகளைப் பெறுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கிறது.

மூன்றாவதாக, நிழல் பொருளியல் சமூக சமத்துவமின்மையை அதிகரிக்கிறது. நிழல் பொருளாதாரத்தில் ஈடுபடும் சிலர் அதிக செல்வத்தை ஈட்டுகின்றனர், அதே நேரத்தில் பெரும்பான்மையான மக்கள் குறைந்த வருமானத்துடன் போராடுகின்றனர். இது சமூகப் பதற்றம் மற்றும் அதிருப்தியை அதிகரிக்கிறது.

நான்காவதாக, நிழல் பொருளியல் சட்ட அமுலாக்கத்தை பாதிக்கிறது. நிழல் பொருளாதார நடவடிக்கைகள் சட்டத்துக்குப் புறம்பானவை என்பதால், அவற்றைக் கட்டுப்படுத்துவது சவாலாக உள்ளது. இது குற்றச்செயல்பாடுகளுக்கு வழிவகுக்கும். அத்துடன் சட்ட ஒழுங்கைப் பாதிக்கும்.

இறுதியாக, நிழல் பொருளியல் முதலீட்டை ஊக்குவிப்பதில் தடையாக உள்ளது. முதலீட்டாளர்கள் நிலையற்ற மற்றும் ஊழல் நிறைந்த பொருளாதாரத்தில் முதலீடு செய்ய தயக்கம் காட்டுகின்றனர். இது பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக உள்ளது.

நிழல் பொருளியலின் தாக்கத்தை குறைக்க, அரசு பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதில் வரி சீர்திருத்தம், ஊழல் தடுப்பு, சட்ட அமுலாக்கத்தை வலுப்படுத்துதல் மற்றும் பொறுப்புக் கூறல் ஆகியவை அடங்கும். மேலும், பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்கத்தை ஊக்குவிக்கும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதும் அவசியம்.

முடிவில், நிழல் பொருளியல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இது அரசின் வருமானத்தைக் குறைத்து, ஊழலுக்கு வழிவகுத்து, சமூக சமத்துவமின்மையை அதிகரித்து, சட்ட அமுலாக்கத்தை பாதித்து, முதலீட்டை ஊக்குவிப்பதில் தடையாக உள்ளது. இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க அரசு தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். – என்றார்.

# வட மாகாண குத்துச்சண்டை போட்டியில் மடு கல்வி வலய மாணவன் சாதனை!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

வட மாகாண ரீதியில் நடைபெற்ற குத்துசண்டைப் போட்டியில் முதலாம் இடத்தை பெற்று மடு கல்வி வலய மாணவன் சாதனை படைத்துள்ளார்.

வடக்கு மாகாண பாடசாலை ரீதியாக 20 வயது பிரிவில் குத்துசண்டை போட்டியில் பங்கு பற்றிய பெரிய பண்டிவிரிச்சான் மகா வித்தியாலய மாணவன் விஜிதன் கபிலன் முதலாம் இடத்தை பெற்றுள்ளார்.

கடந்து 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் முல்லைத்தீவில் நடந்த போட்டியில் குறித்த மாணவன் பங்கு பற்றி முதலாம் இடத்தை பெற்றுச் சாதித்துள்ளார்.

தற்போது மாகாண மட்ட பாடசாலை ரீதியாக மெய்வல்லுநர் போட்டிகள் இடம்பெற்ற வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# புளூ மௌண்டன் ரீ -10 சம்பியன் பாலமுனை அல் அறபா அணியிடம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நிந்தவூர் புளூ மௌண்டன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நிந்தவூர் பொது விளையாட்டி மைதானத்தில் இடம்பெற்ற புளூ மௌண்டன் சம்பியன் சம்பியன் கிண்ண மென்பந்து ரீ -10 கிரிக்கட் சுற்றுப்போட்டியில் சம்பியன் கிண்ணத் தையும், 25 ஆயிரம் பணப் பரிசையும் பாலமுனை அல் அறபா விளையாட்டுக் கழகம் தனதாக்கிக் கொண்டது.

இந்தச் சுற்றுப் போட்டியில் நிந்தவூர், மருதமுனை, பாலமுனை, அக்கரைப் பற்று, கல்முனை, இறக்காமம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 17 அணிகள் பங்குபற்றி இருந்தன.

சுற்றுப் போட்டியில் இறுதி ஆட்டத் துக்குப் பாலமுனை அல் அறபா விளையாட்டுக்கழகமும், நிந்தவூர் புளூ மௌண்டன் விளையாட்டுக்கழகமும் தெரிவாகியிருந்தன.







# சிந்துஜாவின் மரணத்தின் எதிரொலி மன்னார் ஆஸ்பத்திரியில் மாற்றம்!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் நேற்று செவ்வாய்க்கிழமை (20) மாலை அவசர கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன், மேலதிக அரச அதிபர், பிரதேச செயலாளர் , உதவி மாவட்ட செயலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் , வைத்தியசாலை பணிப்பாளர், அருட்தந்தையர்கள், வைத்திய நிபுணர்கள் ,சிவில் சமூக பிரதிநிதிகள், ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் எதிர்கால நகர்வு தொடர்பாகவும் மக்கள் அச்சமின்றி வைத்தியசாலைக்கு வரும் சூழலை ஏற்படுத்தி முன்னோக்கி நகர்வோம் என்னும் நோக்கு நிலையில் பல விடயங்கள் அறிவு பூர்வமாக ஆராயப்பட்டது.

இதன் போது சில விடயங்களுக்குத் தீர்வு கோரி ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதவுள்ளார் என்று அரச அதிபர் கூறினார்.

மேலும் இன்முகத்தோடு நோயாளரை அணுகும் முறைமை தொடர்பில் பயிற்சி வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சிந்துஜாவின் துன்பியல் சம்பவம் போன்று இனி நிகழக் கூடாது என்று வலியுறுத்தப்பட்டது.





# நற்பிட்டிமுனையில் தொடர்ந்து வீசப்படும் விலங்குக் கழிவுகள்!

## கல்முனை மாநகர சபை புறக்கணிக்கிறதா என மக்கள் கேள்வி

(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட நற்பிட்டி முனை குளப் பகுதியில் தினமும் ஆடு மாடு மற்றும் கோழிக் கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்ற வீதம் அதிகரித்து வருகிறது.

குறிப்பாக தாளவெட்டுவான் சந்தியில் இருந்து நற்பிட்டிமுனை நோக்கி செல்லும் பழைய இலங்கை மின்சார சபை வீதியின் இடப்பக்கமுள்ள குளக்கரையில் தினமும் இத்தகைய குப்பைகள் இனந்தெரியாதோரால் கொட்டப்பட்டு வருவது அதிகரித்துள்ளது.

இதனால் அந்தப் பகுதியில் உள்ள குடிமக்கள் வாழ முடியாதவாறா பெரிதும் அசௌகரியத்துக்கு உள்ளாகி இருக்கின்றனர். அவர்களது குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அது மாத்திரமல்லாமல் அந்தச் சூழல் பாதிக்கப்பட்டு மாசடைந்து கொண்டிருக்கின்றது.

இதனை அப்பகுதி குடியிருப்பாளர்கள் பல தடவைகள் கல்முனை மாநகர சபையிடமும் பொதுச் சுகாதார பரிசோதகரிடமும் முறையிட்டும் இது வரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று அங்குள்ள குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தமிழர் பிரதேசம் என்பதால் இந்த பாராமுகமா? புறக்கணிப்பா? என்று அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

இப்படியான சூழலில் சில தினங்களுக்கு முன்னரும் அங்கு மாட்டுக் கழிவுகள், ஆட்டு கழிவுகள், கோழிக்கழிவுகள் அங்கு கூடுதலாக வீசப்பட்டிருக்கின்றன.

இது அந்த சூழலை மாசுபடுத்துவதோடு மக்களுக்கு நோய்கள் உருவாகும் சூழலையும் ஏற்படுத்துகிறது.

காகங்கள் அக் கழிவுகளை அக்கம் பக்கத்திலுள் குடியிருப்புகளில் குறிப்பாக கிணறுகளில் போடுகின்றன. நாய்களும் அசுத்தப்படுத்துகின்றன.

குப்பைகள் கொட்டுவதை தடுப்பதற்கு கல்முனை மாநகர சபை நடவடிக்கை எடுக்குமா என்று அந்த மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.





# மட்டு. திருப்பெருந்துறையில் மரநடுகை!

(பழுவூரான்)

உலகத்தன்மம் சமூக அமைப்பின் மண்முனை வடக்கு பிரிவின் ஏற்பாட்டில் மண்முனை வடக்கு பிரிவு திட்ட செயற் பாட்டுக் குழுவின் தலைவியும் கல்வி செயற்பாட்டு அதிகாரியுமான திருமதி திருமலர்ச்செல்வி மரியநாயகம், அமைப்பின் மண்முனை வடக்கு திட்ட செயற்பாட்டுக் குழு பொருளாளரும் சமூக அபிவிருத்தி அதிகாரியுமான இ.செல்லத்தம்பி சுரேஷ், அமைப்பின் மண்முனை வடக்கு பிரிவு திட்ட செயற்பாட்டுக் குழுவின் செயலாளரும் சமூக கலாசார செயற்பாட்டு அதிகாரியு மான திருமதி கமல்ராஜ் சகுந்தலா, அமைப்பின் மண்முனை வடக்கு விவ சாயத்துறை அதிகாரி பாக்கியம் ஜோச் எட்வேட் ஆகியோரின் ஒருங்கிணைந்த செயற்பாடாக திருப்பெருந்துறை வட பத்திரகாளியம்மன் கோவில் வளா கத்தில் பயன் தரும் மரங்களும் நிழல் தரும் மரக்கன்றுகள் நேற்று செவ்வாய்க் கிழமை (20) நடப்பட்டன.

இந்த நிகழ்வு அமைப்பின் ஸ்தாபகர் செ.ரா.பயஸ் ராஜேந்திரத்தின் மகன் அண்கணாளனின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது ஆலய நிர்வாகத்தினர் மற்றும் சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# கெயார் லங்கா அறக்கட்டளையின் ஈராண்டு பூர்த்தி விழா நிகழ்வுகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கெயார் லங்கா அறக்கட்டளையின் ஈராண்டு பூர்த்தி விழா மற்றும் பரிசளிப்பு விழா ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூ ரியின் ஆரம்பப் பிரிவு பிரதான மண்ட பத்தில் அறக்கட்டளையின் ஸ்தாபகப் பணிப்பாளர் திருமதி அருச்சுனி தலை மையில் நடைபெற்றது.

இதன் போது கெயார் லங்கா அறக் கட்டளையின் மூலம் கடந்த வாரம் நுவரெலியா மற்றும் ஹட்டன் கல்வி வலய பாடசாலைகளின் மாணவர்க ளுக்கு இடையே நடாத்தப்பட்ட சதுரங்க போட்டியில் பங்கு பற்றிய அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

மலையக மாணவர்களின் கல்விக் காக ஒன்றிணைவோம் எனும் இந்த நிழ்வில் இலங்கை திறந்த பல்கலைக் கழக ஓய்வுநிலை பேராசிரியர் ஏ.எஸ். சந்திரபோஸ் , நுவரெலியா கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். கணேஷராஜ், ஹைலன்ஸ் கல்லூ ரியின் அதிபர் ராஜன், உதவி அதிபர் திருமதி. தேன்மொழி, கெயார் லங்கா அறக்கட்டளையின் பணிப்பாளர் டாக்டர் ரமேஷ்குமார், உறுப்பினர்களான கணேஷன் இளையராஜா, செல்வி. பிளசினா, ரூபதர்ஷன், பாசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# நாட்டைக் கட்டியெழுப்பிய தலைவரை எதிர்க்க மொட்டுக்கு உரிமை இல்லை!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

நாட்டைக் கட்டியெழுப்பிய தலைவரை எதிர்ப்பதற்கு மொட்டுக் கட்சிக்கு தார்மீக உரிமை இல்லை என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். மொட்டு உட்பட அனைத்து அரசியல் கட்சிகளும் நாட்டில் மீண்டும் அரசியலுக்கு வரக்கூடிய முறைமையை தற்போதைய ஜனாதிபதி உருவாக்கியுள்ளார் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

நேற்று முன்தினம் (19) குருநாகல் மாவட்டத்தின் நிகவெரட்டிய தொகுதியில் கூட்டு ஜனாதிபதி தேர்தல் குழுக்களை அமைப்பது தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்ட போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். நிகவெரட்டிய மஹசென் போக்குவரத்து கூட்டுறவு சங்க மாநாட்டு மண்டபத்தில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

இங்கு வந்தவர்கள் அனைவரும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகவே வந்திருக்கின்றனர். நான் ரணில் விக்கிரமசிங்க மேடையில் ஏறும் போது நீங்கள் எந்தக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துகிறீர்கள் என்று எல்லோரும் கேட்கிறார்கள். நாங்கள் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்துகிறோம். நாங்கள் அந்தக் கட்சியை விட்டு விலகவில்லை. இந்த தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையான நிலைப்பாடு உள்ளது.

2015 ஆம் ஆண்டு மஹிந்த தோல்வியடைந்த போது, எமது கட்சியின் பொறுப்பாளர்கள் மஹிந்தவைக் கைவிட்டுவிட்டனர். அப்போது ஏகப் பொறுப்பாளராக இருந்த நான் மஹிந்த சுலங்கவை எடுத்துக்கொண்டு நாடு முழுவதும் சென்றேன்.அவர் போரை முடிவுக்குக் கொண்டுவந்ததால் நாங்கள் எங்கள் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதால் நாங்கள் அதைச் செய்தோம். நாங்கள் எப்போதும் தவறு செய்தோம். நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டோம். ஆட்சிக்கு வந்ததும் அது மறைந்துவிடும். மகிந்தவை ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு மொட்டுக் கட்சியை உருவாக்க நாடு முழுவதும் சென்றவன் நான். 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு கோட்டாபய ராஜபக்ஷவைக் கொண்டுவர வேண்டாம் என்று கூறியவன் நான். தன்னால் போட்டியிட முடியாது என்று அவர் கூறியபோதும் குடும்பம் ஒன்று கூடிப் பேசி கோட்டாபயவை போடுவோம்



என்றனர். அதற்கு நாங்கள் அப்போதே சம்மதித்தோம். அவரை வெற்றிக்கு அழைத்துச் சென்றோம். பிறகு நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றி பெற்றோம். இரண்டு வருடங்கள்தான் அதிகாரத்தை நிலைநாட்ட முடிந்தது.

நம் தலைவர்கள் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டனர். 2019 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானார். மகிந்த ராஜபக்ஷ பிரதமரானார், பசில் ராஜபக்ஷ நிதி அமைச்சரானார், சமல் மற்றும் நாமல் இருவரும் அந்த அமைச்சரவையில் இருந்தனர். நானும் அங்கே இருந்தேன். உரப்பிரச்சினை வந்தபோது அதுபற்றிப் பேசியபோது எங்களின் கருத்துக்கு மதிப்பளிக்கப்படவில்லை. அவர்களின் எண்ணத்துக்கேற்பவே பணியாற்றினார்கள். பௌத்த துறவி, வைத்தியர், ஆசிரியர், விவசாயி, தொழிலாளர் ஆகிய ஐந்து பெரும் சக்திகளுடன் மொட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம். விவசாயிகள், ஆசிரியர்கள், தொழிலாளர்களை இழந்தோம்.

மக்கள் எமக்கு அதிகாரம் கொடுத்தாலும் எமது தலைவர்கள் எம்மை பாதுகாத்தார்களா என்ற பிரச்சினை உள்ளது.

அன்று எங்கள் தலைவர்கள் ஓடிவிட்டனர். நாட்டைப் பொறுப்பேற்க யாரும் இல்லை. அப்போது எமது தலைவர்கள் இந்தநாட்டைரணில்விக்கிரமசிங்கவிடம் ஒப்படைத்தனர். அதை வழங்கியது ராஜபக்ஷ குடும்பம், நாங்கள் அல்ல. அது கைமாறி இரண்டரை வருடங்கள் கடந்துள்ள நிலையில் ஜனாதிபதி தேர்தல் வரும்போது இந்த நாட்டை கட்டியெழுப்பிய தலைவரை வேண்டாம் என்று சொல்வதற்கு தார்மீக உரிமை இல்லை. மொட்டு உட்பட அனைத்து அரசியல் கட்சிகளும் வீதியில் இறங்கி அரசியல் செய்யக் கூடிய சூழலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உருவாக்கினார்.

இன்று பங்களாதேசத்துக்கு என்ன நடந்தது என்று பாருங்கள். அந்த நாட்டு தலைவர் இன்று ஓடிப் போய்விட்டார். இன்று நாடு அராஜக நிலையில் உள்ளது. வாரிசு ஜனாதிபதி வந்த பிறகும் அந்த நாட்டில் கொலைகள் நிற்கவில்லை. 26 நாடாளுமன்ற உறுப்பினர்களின் குடும்பத்தினர் வெளியே எரித்து கொல்லப்பட்டனர்.

அன்று ரணில் விக்கிரமசிங்க இல்லாவிட்டால் இந்த நாடு அந்த நிலைக்கு வந்திருக்கும். நாங்கள் எங்கள் கட்சியிடம் ஒரே ஒரு விஷயத்தை கேட்டோம், அன்றைய தினம் அவருக்கு அதிகாரம் கொடுக்க முடியுமானால் மீண்டும் ஏன் ஆட்சியை கொடுக்க முடியாது.

நாமலை போட்டால் ஜெயிக்க முடியுமா? என்று கேட்டோம். தோற்கும் என்று தெரிந்தும் ஏன் நாமலை போட்டீர்கள்? மாறாக, வெற்றிபெறும் ஒரு வேட்பாளருக்கு உதவுமாறும், இந்த நாட்டின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அவருக்கு ஆதரவளிக்குமாறும் நாங்கள் பரிந்துரைத்தோம். ஆனால் அவர்கள் அதற்கு செவிசாய்க்கவில்லை.

சஜித்தால் இந்த நாட்டை வழிநடத்த முடியுமா? கட்டியெழுப்ப முடியுமா? நாடாளுமன்றத்தில் அவர் பேசுவதைக் கேட்டால், அவரைப் பற்றி கற்பனை செய்யலாம். இதற்கு ரணில் விக்கிரமசிங்க மட்டுமே தகுதியானவர். எனவே, யார் என்ன சொன்னாலும் நமக்குப் பெரிய பொறுப்பு இருக்கிறது. இந்த மேடை நாட்டை நேசிக்கும் மக்களை பிரதிபலிக்கிறது. இங்கு யாரும் தனிப்பட்ட அரசியல் செய்யவில்லை. எங்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன. ரணில் விக்கிரமசிங்கவை எதிர்த்தவர்கள் இன்று ஒரே மேடையில் நின்று அவருக்கு ஆதரவளிக்கின்றனர்.– என்றார்.

இந்நிகழ்வில் கால்நடை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.பி ஹேரத், ஊடக இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, அசங்க நவரத்ன, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் அகில விராஜ் காரியவசம், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், அதன் பிரதித் தலைவர்கள் மற்றும் எதிர்க்கட்சியினர் மற்றும் உள்ளூராட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



# நெற் களஞ்சியசாலையை சேதப்படுத்திய யானைகள்!

(பழுவூரான்)

வவுணதீவு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கரவெட்டி கிராமத்தில் ஞாயிற் றுக்கிழமை (18) இரவு புகுந்த காட்டு யானைகள் தனியாருக்குச் சொந்தமான நெற்களஞ்சியசாலை ஒன்றை உடைத்து சேதப்படுத்தி உள்ளது.

வவுணதீவு கரவெட்டி கிராமத்தில் உள்ள அம்பலவாணர் நெற்களஞ்சிய சாலையையே இவ்விதம் காட்டு யானைகள் உடைத்து சேதப்படுத்தி உள்ளன.

பெரும் சத்தத்துடன் வளவுக்குள் புகுந்த காட்டு யானைகள் பூட்டப்பட்டிருந்த களஞ்சியசாலையை கடுமையாக தாக்கி சுவர்களை உடைத்துச் சேதப் படுத்தின. அங்கு அடுக்கி வைக்கப் பட்டுள்ள நெல்மூடைகளையும் இழுத்துக் கொட்டியுள்ளன.

அத்தோடு அங்கிருந்த பயன் தரும் சில தென்னை மரங்களுக்கும் சேதம் விளைவித்துள்ளன.

இதன்போது கிராமத்தில் இருந்த அயலவர்கள் கூக்குரலிட்டு பெரும் சிரமத்துக்கு மத்தியில் காட்டு யானைகளைத் துரத்தினர் என்று அப் பிரதேச தேசவாசிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் பலமுறை முறையிட்டும் உரிய தரப்பினர் ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்கவில்லை எனப் பிரதேசவாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

# எனது தாய்க் கட்சியில் இருந்து ஒருபோதும் விலகிப்போக மாட்டேன்

## நுவரெலியா பிரதேச சபையின் முன்னாள் தலைவர் வேலு யோகராஜ்

(ஆ.ரமேஸ்)

எனது தாய் கட்சி, அரசியல் பாசறை, மற்றும் வேலு யோகராஜ் என்ற பெயரை சமூகத்திற்கு விளங்கச்செய்த இலங்கை தொழிலாளர் காங்கிரசை விட்டு ஒரு போதும் விலகிச் செல்ல மாட்டேன்.

நுவரெலியா பிரதேச சபையின் முன்னாள் தலைவர் வேலு யோகராஜ் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பு நுவரெலியா இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மாவட்ட காரியாலயத்தில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்டு விளக்கமளித்த வேலு யோகராஜ் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் சில இணையத்தள சமூக ஊடகங்களில் செய்திகள் பரப்பப் பட்டுள்ளன.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில்



ரனில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க இ.தொ. கா தீர்மானம் எடுத்துள்ள நிலையில் நுவரெலியா மாவட்டத்தில் முன்னெடுக்க வேண்டிய பொறுப்புக்கள் காங்கிரஸ் உயர் பீடத்தால் எனக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் நான் காங்கிரஸை விட்டு விலகிவிட்டேன். ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க போவதாகவும், அவர்களின் கட்சியில் இணைந்து விட்டதாகவும் பொய்யான செய்திகள் பரப்பப்பட்டு எனது பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறாக சமூக வலைத்தளங்களில் உள்ள சில இணையத்தள, ஊடகங்களில் என் மீது பிழையான கருத்தை தெரிவித்து செய்திகள் பரப்பப்படுகிறது. இதனை வன்மையாக கண்டிக்கின்றேன்.

அதேநேரத்தில் கடந்த காலத்தில் நாடு எதிர்நோக்கிய பொருளாதார சிக்கலில் இருந்து நாட்டில் அனைத்து மக்களையும் காப்பாற்ற முன்வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வுக்கு நுவரெலியா மாவட்ட மக்கள் முன்வந்து வாக்களித்து வெற்றிப்பெற செய்ய வேண்டும்.

அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவை தவிர வேறு எவருக்கும் ஆதரவு வழங்கவும் மாட்டேன். இ.தொ. காவை தவிர வேறு எந்த கட்சியுடனும் இணையவும் மாட்டேன்.-என்றார்.





# கொவிட் -19, பொருளாதார நெருக்கடி காலத்து உரிமை தொடர்பில் ஆராய்வு

(பாறுக் ஷிஹான்)

தொற்றுநோய் கால நீதி மற்றும் சுகாதார உரிமை தொடர்பான மக்கள் ஆணையம் நடத்திய கோவிட் -19 மற்றும் பொருளாதார நெருக்கடி காலத்தில் உங்களது சுகாதார உரிமைகள் மீறப்பட்டதா? உங்களிடம் மறக்க முடியாத அனுபவம் உள்ளதா? என்பது தொடர்பிலான பொது விசாரணை நிகழ்ச்சி திங்கட்கிழமை (19) காலை முதல் மாலை வரை அட்டாளைச்சேனை தனியார் விடுதியில் நடைபெற்றது.

நிகழ்வு எல்.எஸ்.றி அமைப்பால் தேசிய மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தத் திட்டம் அம்பாறை மாவட்டமட்டத்தில் மனித எழுச்சி அமைப்பின் இயக்குநரான கே. நிஹால் அஹமட்டுடைய ஒருங்கிணைப்பில் இடம்பெற்றது. இதன்போது ஆணையத்தின் தலைவரான சர்வோதய தலைவர் வின்யா ஆரியரட்ன, ஆய்வாளர் சிவஞானம் பிரபாகரன், கலாநிதி உபுல் விக்ரமசிங்க ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.



மாவட்ட மட்டத்தில் மூவின சமூகங்களுடைய பிரதிநிதிகளும் பங்குபற்றியிருந்தனர். அனைவருக்கும் சம பங்கு பொறுப்புக்கூறல் மற்றும் ஆரோக்கியத்துக்கான உரிமைகளை உறுதிப்படுத்தல் தொடர்பில் பல்வேறு விளக்கவுரைகள் வழங்கப்பட்டன.

பங்கேற்பாளர்கள் அனைவரும் கொவிட் -19 மற்றும் பொருளாதார நெருக்கடி காலத்தில் உங்களது சுகாதார உரிமைகள் மீறப்பட்டதா? உங்களிடம் மறக்க முடியாத அனுபவம் உள்ளதா? எனும் கருத்துக்களை பொதுவெளியில் பரிமாறிக்கொண்டனர்.



# கல்முனை உதைபந்தாட்ட சம்பியனாக மருதமுனை அல் மனார் மத்தி தெரிவு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை பாடசாலைகள் உதைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் கல்முனை கல்வி மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் மருதமுனை அல் மத்திய கல்லூரி சம்பியனானது.

சவளக்கடை அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியின் 20 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் உதைபந்தாட்ட அணியினர் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டப் போட்டிகளில் விளையாடுவதற்கு தகுதி பெற்றுள்ளனர் .

இந்தச் சுற்றுப் போட்டியில் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி, பெரிய நீலாவணை புலவர்மணி ஷரிபுத்தீன் மகா வித்தியாலயம், சொறிக்கல்முனை ஹொலி ஹீரோஸ் வித்தியாலயம், மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி ஆகிய நான்கு பாடசாலை அணிகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# நின்றிருந்த லொறி மீது கார் மோதியதில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் மரணம்

லக்னோ,ஓக.21

நின்றிருந்த லொறி மீது கார் மோதியதில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் உயிரிழந்தனர். 2 பேர் காயமடைந்தனர்.

உத்தரபிரதேச மாநிலம் எட்டாவா மாவட்டத்தில் உள்ள எட்டாவா-கான்பூர் தேசிய நெடுஞ்சாலையின் ஓரத்தில் நின்றிருந்த லொறி மீது கார் மோதியது. இந்த விபத்தில் காரில் வந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் உயிரிழந்தனர். மேலும் இருவர் காயமடைந்தனர்.

உயிரிழந்தவர்கள் டெல்லியில் இருந்து ஹமிர்பிர் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. இந்த விபத்து பற்றி தகவல் கிடைத்ததும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று உயிரிழந்தவர்களின் உடல்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

விபத்தில் பலத்த காயமடைந்த இருவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அம்மாநில முதல்-மந்திரி யோகி ஆதித்யநாத் இரங்கல் தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்குமாறு அதிகாரிகளுக்கு முதல்-மந்திரி அறிவுறுத்தியுள்ளார்.

# விஜய் கட்சியின் கொடி நாளை அறிமுகமாகும்

சென்னை,ஓக.21

தமிழக வெற்றிக் கழகத்தின் கொடியை அக்கட்சியின் தலைவர் விஜய் நாளை (வியாழக்கிழமை) அறிமுகம் செய்கிறார்.

விஜய் கட்சியின் கொடி எந்த நிறத்தில் இருக்கும் என்று தொண்டர்கள் மிகுந்த ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

நடிகர் விஜய் 'தமிழக வெற்றிக் கழகம்' என்ற புதிய கட்சியை தொடங்கியுள்ளார். கட்சி தொடங்கிய அறிவிப்பை கடந்த பிப்ரவரி மாதம் 2 ஆம் திகதி விஜய் அதிகாரபூர்வமாக அறிவித்தார். வரும் 2026 தமிழக சட்டசபை தேர்தலில் போட்டியிடுவதாக விஜய் அறிவித்துள்ளார். இருப்பினும் கட்சியின் கொடி, சின்னம் அறிவிக்கப்படவில்லை. இந்த கட்சியின் முதல் மாநாட்டை விக்கிரவாண்டியில் நடத்த கட்சி தலைமை திட்டமிட்டுள்ளது.



இதற்கிடையில், நேற்று முன்தினம் மஞ்சள் நிறத்துடன் நடுவில் விஜய் படம் இருப்பது போன்ற கட்சிக்கொடி, பனையூரில் கட்சி அலுவலகத்தில் நடப்பட்டுள்ள 45 அடி உயர கொடி கம்பத்தில் ஏற்றி ஒத்திகை பார்க்கப்பட்டது. இதுதான் தமிழக வெற்றிக் கழகத்தின் கொடியா என்று தெரியாத நிலையில் இந்த வீடியோ இணையத்தில் வேகமாக பரவி வருகிறது.

இந்த நிலையில், தமிழக வெற்றிக் கழகத்தின் கொடியை அக்கட்சியின் தலைவர் விஜய் நாளை (வியாழக்கிழமை) அறிமுகம் செய்கிறார். சென்னை பனையூரில் நடைபெறும் விழாவிற்கு கட்சியின் முக்கிய நிர்வாகிகளுக்கு மட்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. விஜய் கட்சியின் கொடி எந்த நிறத்தில் இருக்கும் என்று தொண்டர்கள் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.














# ஹாரிஸ் குறித்து ஒபாமா புகழாரம்

நியூயோர்க்,ஓக.21

ஜனநாயக கட்சியின் 2 ஆம் நாள் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய முன்னாள் அதிபர் பராக் ஒபாமா, ஒரு புதிய அத்தியாயத்திற்கு அமெரிக்கா தயாராகி வருகிறது என்றார்.

ஜனநாயகக் கட்சியின் 2 ஆம் நாள் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய முன்னாள் அதிபர் பராக் ஒபாமா, ஒரு புதிய அத்தியாயத்திற்கு அமெரிக்கா தயாராகி வருகிறது என்றார்.

அமெரிக்க அதிபர் தேர்தல் நவம்பர் 5 ஆம் திகதி நடைபெற உள்ளது. இதில் குடியரசு கட்சி வேட்பாளராக முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்ப் போட்டியிடுகிறார். ஜனநாயக கட்சி வேட்பாளராக கமலா ஹாரிஸ், அறிவிக்கப்பட்டு உள்ளார்.

இந்த சூழலில், அமெரிக்காவின் சிகாகோ நகரில் ஜனநாயக கட்சியின் 4 நாள் மாநாடு நேற்று தொடங்கியது. இதனை காண்பதற்காக அக்கட்சியை சேர்ந்த தொண்டர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் திரண்டனர்.

இந்த மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கான ஜனநாயக கட்சியின் அதிகாரபூர்வ அதிபர் வேட்பாளராக கமலா ஹாரிஸ் முறைப்படி அறிவிக்கப்படுவார். இதேபோன்று, துணை அதிபர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு உள்ள மின்னசோட்டா கவர்னர் டிம் வால்ஸும் முறைப்படி வேட்பாளராக இந்த மாநாட்டில் அறிவிக்கப்படுவார்.

இந்த நிலையில், மாநாட்டில் பங்கேற்று பேசிய கமலா ஹாரிஸ், ஜோ பைடனுக்கு தன்னுடைய நன்றியை தெரிவித்து கொண்டார். அவருக்கு நாங்கள் எப்போதும் நன்றியுடையவர்களாக இருப்போம் என கூறினார்.

முதல் நாளில், கமலாவுக்கு ஆதரவாக, அமெரிக்க கூடைப்பந்து போட்டியின் பயிற்சியாளர் ஸ்டீவ் கெர், ஹிலாரி கிளிண்டன் உள்ளிட்டோர் பேசினர்.

இதனை தொடர்ந்து, 2 ஆம் நாள் மாநாடு இன்று நடந்தது. இதில், முன்னாள் அதிபர் பராக் ஒபாமா இந்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கமலா ஹாரிஸ் தனக்கு நம்பிக்கையை தருகிறார் என கூட்டத்தினரின் முன் கூறினார்.

தொடர்ந்து அவர், மக்களுக்கு முழு வாழ்வையும் செலவிட்ட ஒருவரை தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது. நான் கடந்த காலங்களை திரும்பி பார்க்கிறேன். என்னுடைய முதல், பெரிய முடிவு சிறந்த ஒன்றாக இருந்தது. அது, என்னுடைய துணை அதிபராக பணியாற்ற ஜோ பைடனை கேட்டு கொண்டேன்.

ஒரு திறமையான அதிபராக பைடனை வரலாறு நினைவுகூரும். அவரை என்னுடைய அதிபராக அழைப்பதிலும், என்னுடைய நண்பராக அழைப்பதிலும் நான் பெருமை கொள்கிறேன் என்றார்.

அவர் கமலா ஹாரிஸைப் பற்றி பேசும்போது, ஒரு புதிய அத்தியாயத்திற்கு அமெரிக்கா தயாராகி வருகிறது. கமலா ஹாரிசுக்காக நாங்கள் தயாராகி வருகிறோம். அவர் அதிபர் பணிக்கு தயாராக இருக்கிறார்.

அவர், தன்னுடைய விவகாரங்களை விட உங்கள் மீது அதிக கவனம் செலுத்துபவராக இருப்பார். நாடு முழுவதுமுள்ள கோடிக்கணக்கான மக்கள் மீது உண்மையான கவனம் செலுத்தும் ஓர் அதிபர் நமக்கு தேவையாக இருக்கிறார். அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் அதிபர் ஒருவர் நமக்கு தேவை.

சிறந்த ஊதியத்திற்காக பேசுபவராக இருப்பவர் தேவை. அந்த அதிபராக கமலா ஹாரிஸ் இருப்பார். அவரால் முடியும். - என பேசியுள்ளார்.



# 28 பாகிஸ்தானியர்கள் ஈரான் விபத்தில் சாவு!

## 23 பேருக்குக் காயம்

தெஹ்ரான்,ஓக.21

ஈரானில் இடம்பெற்ற பஸ் விபத்தில் பாகிஸ்தானைச் சேர்ந்த 28 யாத்திரீகர்கள் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈரானின் யாஸ்த் மாநிலத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானில் இருந்து ஷியா யாத்ரீகர்கள் 51 பேரை ஏற்றி கொண்டு பஸ் ஒன்று ஈராக் நோக்கி சென்று கொண்டிருந்தது. அந்த பஸ் மத்திய ஈரானிய மாகாணமான யாஸ்டில் நேற்று இரவு விபத்துக்குள்ளானதாக உள்ளூர் அவசர அதிகாரி முகமது அலி மாலெக்சாதே தெரிவித்தார்.

இந்த விபத்தில் 28 யாத்ரீகர்கள் உயிரிழந்தனர். மேலும் 23 பேர் காயமடைந்தனர், அவர்களில் 14 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று அலி தெரிவித்தார். இந்த விபத்து குறித்து தகவலறிந்த பொலிஸார், சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

7 ஆம் நூற்றாண்டின் ஒரு ஷியா துறவி இறந்ததைத் தொடர்ந்து 40 ஆவது நாளை குறிக்கும் அர்பாயீனை நினைவுகூருவதற்காக இந்த யாத்ரீகர்கள் ஈராக் நோக்கி சென்று கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.








கனடா முரசு
பக்கங்கள் 09
புதன்கிழமை 21/08/2024

## கனடாவில் மேலும் பணவீக்கம் சரிவு!

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 21
கனடாவின் பணவீக்கம் ஜூலை மாதம் 2.5 சதவீதமாக குறைந்துள்ளது.

C5

# தமிழர் தெருவிழாவை இலக்கு வைத்து ஆதாரமற்ற குற்றச்சாட்டுப் பிரசாரங்கள்

## கனடியத் தமிழர் பேரவையின் தலைவர் விசனம்

**ஒன்ராரியோ, ஓகஸ்ட் 21**

**கனடியத் தமிழர் பேரவையின் மீதான ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை நிராகரிப்பதாக பேரவையின் தலைவர் குமார் ரட்ணம் தெரிவித்துள்ளார்.**

**கனடியத் தமிழர் பேரவையின் சமூக ஊடகப் பக்கத்தில் இது தொடர்பான ஒளிப் பதிவு ஒன்றினை குமார் ரட்ணம் பதிவு செய்துள்ளார்.**

**இந்த ஒளிப்பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-**




'வணக்கம்! எனது பெயர் குமார் ரட்ணம். கனடியத் தமிழர் பேரவையின் தலைவர். கனடியத் தமிழர் பேரவையின மீதான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் மற்றும் நமது தமிழ் சமூகத்தின் மிகவும் வெற்றிகரமான நிகழ்வுகளில் ஒன்றான தமிழர் தெருவிழாவை இலக்காகக் கொண்ட நியாயமற்ற புறக்கணிப்பு பிரச்சாரங்கள் எமது முன்னிலையில் நிறுத்தப்பட்டுள்ளன.

முதலில் கனடியத் தமிழர் பேரவையின் மீதான ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைப் பார்ப்போம். CTC அதாவது கனடியத் தமிழர் பேரவை, இலங்கை அரசாங்கத்தின் கைப்பிள்ளையாகயாக இணைந்து தமிழர் நலனுக்கு எதிராக வேலை செய்கிறது மற்றும் தமிழருக்கு நடந்த இன அழிப்பை மறுக்கிறது என்ற அடிப்படையற்ற கூற்றுக்களை நான் திட்டவட்டமாக மறுக்கிறேன். இந்த குற்றச்சாட்டுகள் முற்றும் தவறானவை. இக்குற்றச்சாட்டுக்கள் மனித உரிமைகள் மேம்பாடு, தமிழ் மக்களின் பொருளாதார வலுவூட்டல் மற்றும் கலாச்சார பாதுகாப்பு ஆகியவற்றில் 20 ஆண்டுகளுக்கு மேலாக நிரூபிக்கப்பட்ட சாதனை பதிவை கொண்ட ஓர் அமைப்பின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவது தெளிவாக நோக்கப்படுகிறது. இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதி ஒருவர் இன்னொருவருக்கு அனுப்பிய மின்னஞ்சலில் எமது ஸ்தாபனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டதால் நாங்களும் அவரது அரசாங்கமும் கூடிக் குலாவி தமிழ் மக்களுக்கு எதிராக சதித்திட்டம் போடுகிறோம் என்று வாதிப்பதும் அதைத் தாம் சொல்வது தான் சரியானது என நிறுவ முனைவதும் மிகவும் நியாயமற்றவை. இந்த தந்திரோபாயம் எங்கள் சமூகத்தை பிளவுபடுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் சிலர் இந்த பிளவுபடுத்தும் வலையில் துரதிஷ்டவசமாக விழுந்துள்ளனர் என்பதும் தெளிவாகிறது. இந்தப் பொய்யான குற்றச்சாட்டுக்களை அநாமேதயமாக பரப்புபவர்களிடம் ஒரு வேண்டுகோள். உங்கள் முறைப்பாடுகளை வெளிப்படையாகவும் நேர்மையாகவும் கலந்துரையாட நாங்கள் வரவேற்கிறோம். தொடர்ந்து சமூகத்தின் கருத்துக்களை கேட்டு செயல்படுவதில் உறுதியாகவும் உள்ளோம். கனேடிய தமிழர் பேரவையின் கலாச்சாரத்தை இரத்து செய்வதற்கான உங்கள் முயற்சிகள் தீங்கு விளைவிப்பவை மட்டுமல்லாது எங்கள் சமூகத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த முயற்சிப்பவர்களை ஊக்குவிக்கும். இப்போது தமிழர் தெருவிழா பற்றி பேசுவார் இந்த ஆண்டு தமிழர் தெருவிழாவை ரத்து செய்யக்கோரி ஒருங்கிணைத்த சமூக ஊடகப் பிரச்சாரம் நடந்து வருகிறது. பிசாரம் செய்பவர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் மூலம் அச்சுறுத்தல்கள் மற்றும் விழாவில் பங்கேற்க வேண்டாம் என்று எமது சமூகத்தின் மீது அழுத்தம் கொடுக்கிறார்கள். இத்தகைய

C3

# தமிழர் தெருவிழாவைப் புறக்கணிக்க கோருகின்றது தமிழர் தேசிய அவை!

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 21

தமிழர் தெருவிழா உள்ளடங்கலாக கனடியத் தமிழர் பேரவையின் அனைத்து நடவடிக்கைகளையும் புறக்கணிக்குமாறு கனடியத் தமிழர் தேசிய அவை அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் தமது சமூக தளத்தில் கனடியத் தமிழர் தேசிய அவை இரு பக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

தமிழ் கனடியர்கள் மத்தியில் கனடியத் தமிழர் பேரவை ஒரு தேவையற்ற ஒரு அமைப்பாக மாற்றமடைந்து விட்டது என அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

C4




# மட்டக்களப்பிலிருந்து முருங்கைத் தூள்கள்!

## தமிழர் தெருவிழாவில் பெறலாம்

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 21

கனடிய தமிழர் பேரவையின் முயற்சியில் உருவாக்கப்பட்ட கனடா மட்டக்களப்பு கூட்டுறவுப்பண்ணையில் விளைந்த முருங்கை இலைகளில் இருந்து பெறப்பட்ட முருங்கைத் தூள்கள் தமிழர் தெருவிழாவில் காட்சிப்படுத்தப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கனடியத் தமிழர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் -

'கனடிய தமிழர் பேரவையின் முயற்சியில் உருவாக்கப்பட்ட கனடா - மட்டக்களப்பு கூட்டுறவுப்பண்ணையில் முருங்கை மாதிரிப்பயிர்செய்கை மிக சிறப்பாக நடந்து வருகின்றது. இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் திறந்துவைக்கப்பட்ட இந்தப்பண்ணையில் விளைந்த முருங்கை இலைகள் விற்பனைக்கு தயாராகி வருகின்றந. இந்த ஆண்டு தமிழர் தெருவிழாவில் இந்த முருங்கை தூள்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளது என்பதை பெருமையுடன் அறியத்தருகின்றோம்.

புள்ளிவிவர அடிப்படையில் 2018 ஆம் ஆண்டளவில் முருங்கை உற்பத்தியின் மொத்த வருமானம் 5.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். இது 2025இல் 10 பில்லியன் அமெரிக்க டொலர்களை தொடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இன்றைய நிலையில் இந்தியாவே சர்வதேச ரீதியில் 80 சதவிகிதமான முருங்கை உற்பத்திகளை உலகிற்கு வழங்கி வருகின்றது. அதிகரித்துவரும் சந்தை தேவைகளை நோக்குகையில் முருங்கை உற்பத்தி மிகவும் ஆரோக்கியமான பொருளாதார முன்னடைவை பெற்றுத்தரக்கூடிய ஒன்றாகவே பார்க்கப்பட வேண்டும். இலங்கையின் வடக்கு, கிழக்கு பிராந்தியங்களில் முருங்கை உற்பத்திகளை ஊக்குவிப்பதன் மூலம் நிலையான ஒரு சர்வதேச சந்தையை உருவாக்க முடியும். அதற்கான வளமும் எங்களிடம் உண்டு. அவற்றை ஊக்குவிப்பதே இந்த செயட்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.



இந்த முயற்சிகள் வெற்றிபெறும் பட்சத்தில் இந்த மாதிரி பயிர்செய்கையியை பல பிராந்தியங்களில் உருவாக்கி, பல வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களை இந்த உற்பத்திக்கான முக்கிய தளமாகவும் மாற்ற முடியும். இதனால் நிலையான ஒரு வளர்ச்சியையும், எம் பாரம்பரிய முறையிலான விவசாய செயற்பாடுகளில் நம்பிக்கையையும் ஏற்படுத்துவதோடு சிறந்த வாழ்க்கைத்தரத்தையும் உருவாக்க முடியும்.

முருங்கை இலையினதும் அதன் தூளினதும் மகிமைகளை மேலைத்தேய நாடுகள் கடந்த காலங்களில் பெரிதும் ஆதரிப்பதோடு அவற்றை உடல் ஆரோக்கியத்திற்காகவும் பயன்படுத்தி வருகின்றனர். இயற்கையாக எந்த செயற்கை உரமும் பயன்படுத்தாது எம் தாயக உற்பத்தியாளர்களால் கனடா - மட்டக்களப்பு நட்புறவுப்பண்ணையில் உருவாக்கப்பட்ட இந்த மாதிரிகள் தமிழர் தெருவிழாவில் காட்சிப்படுத்தப்படவுள்ளமையோடு இந்த முருங்கை உற்பத்தி தொடர்பாகவும் அதன் நன்மைகள் தொடர்பாகவும் பாவனை முறைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தவும் காத்திருக்கின்றோம்.

தமிழர் கலை, பண்பாடு என்பவற்றோடு எமது வாழ்க்கைமுறையும் இயற்கை பயிர்ச்செய்கை முறையும் என்றும் கொண்டாடப்படவேண்டியவை. கடத்தப்படவேண்டியவையும் கூட. கனடிய தமிழர் பேரவை இந்த ஆண்டு தமிழர் தெருவிழாவில் நம் தாயக தயாரிப்புக்களை சர்வதேச சந்தையில் சந்தைப்படுத்தவும் வர்த்தக முன்னேற்றத்தை பெற்றுக்கொடுக்கவும் முயற்சிகளை ஆரம்பித்துள்ளது. தமிழர் தெருவிழா இதற்கு முதல் ஆரம்பத்தை ஏற்படுத்திக்கொடுக்கவுள்ளதை பெருமையுடன் தெரியப்படுத்துகின்றோம்.

ஓகஸ்ட் மாதம் 24 ஆம்,25 ஆம் திகதிகளில் நடக்கவிருக்கும் தமிழரின் பெருமையாக 10 ஆண்டுகளாக தொடர்ந்துவரும் தமிழர் தெருவிழாவிற்கு உங்கள் அனைவரது ஆதரவையும் எதிர்பார்க்கின்றோம்.

தமிழர் தெருவிழா இது தமிழர்களின் பெருமை.' - என்று உள்ளது.



# அட்லரின் செனட்டர் நியமனத்துக்கு எதிராக பூர்வீகக் குடிகளின் தலைவர்கள் ஆட்சேபம்

மனிடோபா, ஒகஸ்ட் 21

மனிடோபாவில் உள்ள பூர்வீகக் குடிகளின் தலைவர்கள், மூத்த ஒளிபரப்பாளர் சார்லஸ் அட்லரை செனட் உறுப்பினராக நியமித்தமையை இரத்துச் செய்யுமாறு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

பழங்குடி மக்களைப் பற்றிய அட்லரின் கடந்தகால கருத்துக்கள் 'மோசமான தாக்குதல்' மற்றும் ஒரே மாதிரியானவை என்று மனிடோபா தலைமைகளின் சபை கூறுகிறது.

1999இல், வின்னிபெக்கில் ஒரு வானொலி நிகழ்ச்சியில் பணிபுரிந்த போது, அட்லர் பழங்குடியினத் தலைவர்களை 'நாகரீகமற்ற எலும்புத் தலைகள்' மற்றும் 'அறிவுரீதியாக நலந்த வர்கள்' என்று அழைத்திருந்தார்.

சனிக்கிழமையன்று ட்ரூடோவின் ஆலோ ச னையின் பேரில் மனிடோபாவை பிரதிநிதித்துவப்படுத்த செனட்டில் நியமிக்கப்பட்ட அட்லர், தனது முந்தைய வார்த்தைகளின் அடிப்படையில் பழங்குடி மக்களுக்கு மரியாதையுடன் எப்படி வாதிட முடியும் என்று மூத்த தலைவர் கேத்தி மெரிக் கேள்வி எழுப்பியுள்ளார்.

## தமிழர் தெருவிழாவை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் கனடிய விழுமியங்களுக்கு முற்றிலும் முரணானவை. ஈழப் போரின் அதிர்ச்சியில் இருந்து இன்னும் மீளாத ஒரு சமூகத்திற்கு குறிப்பிடத்தக்க தீங்கு விளைவிக்கின்றது என்பதனையும் மறுக்க முடியாது. தமிழர் தெருவிழா பயன்கள் தான் என்ன? CTC யினால் ஏற்பாட்டு செய்யப்பட்ட தமிழர் தெருவிழா கடந்த 9 ஆண்டுகளாக மாபெரும் வெற்றியை எமது சமூகத்திற்கு கொடுத்து வருகிறது. இன்னும் சில நாள்களில் பத்தாவது ஆண்டு கொண்டாட்டம் நடக்க இருக்கிறது. தமிழர் தெருவிழா நமது சமூகத்திற்கு கணிசமான சமூக மற்றும் பொருளாதார நன்மைகளைக் கொண்டு வருகிறது. இது நூற்றுக்கும் மேற்பட்ட வணிக ஸ்தாபனங்களை உள்ளடக்கியது. உள்ளூர் பொருளாதாரத்திற்கு நேரடியாக பங்களிக்கிறது. வெறுமே இரண்டு நாள்களில் 2 மில்லியன் டொலர்கள் உள்ளூர் பொருளாதாரம் மதிப்பை செலுத்தி நூற்றுக்கணக்கான வேலை வாய்ப்புகளையும் நமது இளைஞர்களுக்கு உருவாக்கும் ஆற்றல் கொண்டது. 50க்கும் மேற்பட்ட சமூக நிறுவனங்கள் தங்கள் விலைமதிப்பற்ற சேவைகளை எங்கள் மக்களிடம் பகிர்ந்து கொள்ளும் சாவடிகளை ஏற்று இருக்கிறார்கள். மேலும் 200க்கும் மேற்பட்ட இளம் கலைஞர்கள் தமது கலைத்திறமைகளை வெளிப்படுத்த உள்ளனர். சமூகத்தை மீட்பவளாக காட்டிக் கொள்ளும் முகம் தெரியாத பிரச்சாரகளிடம் ஓர் ஆலோசனை. எங்கள் சமூகத்தை அழிப்பதே உங்கள் இலக்கு என்றால் நீங்கள் உன்னிப்பாக திட்டமிடப்பட்ட ஒரு வலையில் விழுந்து விட்டீர்கள் என்பது உறுதி. உங்கள் செயல்கள் ஒரு குறுகிய பார்வை மற்றும் பிரிவினை முயற்சிகளையும் தரந்த தாக்கத்தை பற்றிய புரிதலின் பற்றாக்குறையை வெளிப்படுத்துகின்றன. எமது மக்களுக்கு ஒரு வேண்டுகோள். உங்கள் வாழ்க்கையை வாழவும் பொருளாதார வாய்ப்புகளை உருவாக்கவும் உங்கள் கலைத் திறமைகளை உங்களுக்கு ஏற்றவாறு வெளிப்படுத்தவும் உங்களுக்கு மட்டுமே உரிமை இருக்கிறது. நீங்கள் என்ன செய்ய வேண்டும், எப்படி வாழ வேண்டும் என்று மற்றவர்கள் உங்களுக்கு சொல்ல அனுமதிக்காதீர்கள் மற்றும் மிரட்டல் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு ஆளாகாதீர்கள். இந்த பிரச்சாரங்களுக்கு பின்னால் இருப்பவர்கள் நமது சமுதாயத்துக்கு ஆக்கபூர்வமாக எதையுமே வழங்கவில்லை. ஆவணி 24 மற்றும் 25 ஆம் தேதிகள் மார்க்கம் சாலையில், மெக்னிக்கோல் மற்றும் பாஸ்மோர் இடையேயான தமிழர் தெருவிழாவில் எங்களுடன் கலந்து கொள்ளுங்கள் மழையோ வெயிலோ பனியோ புயலோ உங்கள் அனைவரையும் வரவேற்க நாம் காத்திருக்கிறோம். நன்றி' - என்று உள்ளது.

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனடியத் தமிழர் பேரவையை முற்றாக நிராகரிக்கவும், தமிழர் தெருவிழா உட்பட அதன் அனைத்து செயல்பாடு களையும் புறக்கணிக்கவும், அனைத்து மட்ட அரசாங்கங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து மக் கள் பிரதிநிதிகளை கனடிய தமிழர் சார்பில் கூட்டாக கோருவதாக கனடி யத் தமிழர் தேசிய அவை தெரிவித்துள்ளது.

கனடியத் தமிழர் தேசிய அவை
National Council of Canadian Tamils
Conseil National de Tamouls Canadien

**Immediate release: August 20, 2024**

# Tamil Canadians call for the complete rejection of CTC and the boycott of all its activities including Tamil Fest

The infamous "Himalayan Declaration" became public on December 7, 2023, when members of Global Tamil Forum (GTF), its member organization Canadian Tamil Congress (CTC) and some Buddhist monks, signed and handed over a declaration to the President of Sri Lanka, and other Sinhala political parties. The content of the document completely undermines the aspirations of the Tamil people while also aiming to bail out those who committed genocide against the Tamil people in the island of Sri Lanka.

The Tamil people have continuously demonstrated their aspirations for a permanent political solution based on their inalienable right to self-determination in their traditional homeland comprising the Northern and Eastern provinces on the island of Sri Lanka. Tamil people have also continued to demand international recognition, international accountability and remedial justice for the genocide committed against Tamil people by the Sri Lankan state.

The resolution adopted by the United Nations Human Rights Council (UNHRC) on October 6, 2022, (51/1) has given a mandate to the OHCHR to collect, consolidate, analyze and preserve evidence to develop possible strategies for international accountability processes to advocate for victims and survivors and to support relevant judicial and other proceedings. Hence, the evidence currently being collected by the OHCHR will very well be used for future processes, such as trials that will hold Sri Lankan genocidaires accountable for their crimes. This is the most effective way to stop the ongoing Tamil Genocide by Sri Lanka, a necessary precondition for any peaceful resolution of the conflict.

However, contrary to the UNHRC resolution 51/1, a statement (Statement 5) in the "Himalayan Declaration" reads, "Envision a Sri Lanka that is reconciled and committed to learning from its past and creating measures including accountability to ensure that such suffering never occurs again." This is deceptively written in a way that absolves past crimes and confines accountability only to the future. This clearly shows that those who committed the genocide against the Tamil people will never be held accountable. This not only contradicts resolution 51/1 but also aims to derail the current UNHRC accountability process. The Tamil people in the diaspora and the homeland have vehemently and unequivocally condemned this treacherous move by GTF and CTC to bail out Sri Lanka.

1

கனடியத் தமிழர் தேசிய அவை
National Council of Canadian Tamils
Conseil National de Tamouls Canadien

The declaration completely avoids talking about the aspirations of the Tamil people. The whole document does not mention "Tamil people," thus completely masking the identity of the victims. There is no hope that this effort will bring any value to the Tamil people; rather, this declaration will irrecoverably damage our effort to find permanent peace and a permanent political solution. Lessons from the past indicate that once the Sri Lankan government is freed from international accountability, they will continue their path of the last 75 years of genocide against the Tamil people. While the clandestine talks involving GTF, CTC, and some Buddhist monks took place in Nepal in April 2023, the Sri Lankan institutions defied the court order to stop the destruction of ancient Hindu temples and build Buddhist temples on the same site. The judge who issued the court order had to flee the country after facing death threats. No discussions about peace should have taken place while the two-faced actions of the Sri Lankan government continued. The GTF and CTC continuing the discussions under these treacherous circumstances only make them complicit in the ongoing Tamil Genocide on the island. In addition, the "Himalayan Declaration" is silent on the fate of over 146,000 missing Tamil people during the heights of the Tamil Genocide. The loved ones of the missing people have already condemned the action taken by the CTC and GTF and rejected the "Himalayan Declaration."

The GTF lost its legitimacy to represent Tamil people when 14 organizations, who originally formed it in 2009, disbanded later, accusing the GTF of undemocratic actions and misrepresenting Tamil peoples' aspirations. The only organization which remained with GTF until recently was CTC.

Since 2009, it was evident that both these organizations were drifting away from the aspirations of the Tamil people. During the many engagements internationally and in Canada, it was evident that CTC has miserably failed to represent Tamil Canadians or reflect Tamil peoples' aspirations. In Canada, there is a widespread recognition federally, provincially, municipally and across school boards of the genocide committed against Tamil people. Being a registered Canadian organization and attempting to downplay the Tamil Genocide committed by successive Governments of Sri Lanka is going against the unanimously passed motions and bills passed at all levels of government in Canada.

Moreover, it is incomprehensible that GTF and CTC met and took photos with the Sri Lankan genocidaire, the former President Mahinda Rajapakshe, whom the Government of Canada has imposed a sanction. There is unanimous condemnation of GTF and CTC in the Tamil diaspora and the Tamil people in their traditional homeland on the island of Sri Lanka. Tamil Canadians are taking serious note of CTC's stand and taking collective action. Many of CTC's Board of Directors, members and advisors have resigned, while many sponsors have also revoked their support.

By betraying the Tamil peoples' aspirations and attempting to protect Sri Lankan genocidaires from international accountability, the CTC has become irrelevant among Tamil Canadians. The Tamil Canadians collectively call elected officials and all levels of government to completely reject CTC and boycott all its activities including Tamil Fest.

Thank you.
National Council of Canadian Tamils

2

@ncctonline
@ncctonline
@ncctonline
http://ncctcanada.ca/



# தற்காலிகமாகக் குடியேறுபவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதற்கு கியூபெக் முதல்வர் கடும் முயற்சி!

கியூபெக், ஓகஸ்ட் 21

மொன்ரியலில் தற்காலிக வெளிநாட்டுபணியாளர் விண்ணபங்களில், மாகாணத்தில் நிரந்தரமற்ற குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையை குறைக்க ஒட்டாவா மீது அழுத்தம் கொடுக்கும் நோக்கம் கொண்ட ஆறு மாதகால நிறுத்தத்தை மாகாண முதல்வர் பிரான்சுவா லெகோல்ட் அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட பாடசாலைகளில் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் அதிகாரத்தை மாகாணத்திற்கு வழங்குவதற்கான சட்டமூலம் ஒன்றையும் கியூபெக் அரசாங்கம் சமர்ப்பிக்க திட்டமிட்டுள்ளது.

இந்த இரண்டு நடவடிக்கைகளும் வீட்டுவசதி, கல்வி மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு மீதான அழுத்தத்தை குறைக்க உதவும் என்றும், மாண்ட்ரீலில் பிரெஞ்சு மொழியைப் பாதுகாக்க உதவும் என்றும் முதல்வர் லெகோல்ட் கூறியுள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில், கியூபெக்கில் தற்காலிகமாக குடியேறியவர்களின் எண்ணிக்கை 300,000 இலிருந்து 600,000 ஆக இரு மடங்காக அதிகரித்துள்ளது,

செப்டம்பர் 3-ம் தேதி முதல் அமலுக்கு வரும் புதிய தடை உத்தரவு, அந்த எண்ணிக்கையில் மிகச் சிறிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனடிய புள்ளிவிவரத் திணைக்களம் இந்தத் தகவலை வெளியிட்டது.

கனடாவின் பணவீக்க விகிதம் மார்ச் 2021 க்குப் பின்னர் மிகக் குறைந்த மட்டத்திற்கு சரிந்துள்ளதாக கனடிய புள்ளிவிவரத் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது.

கனடாவின் பணவீக்கம் மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு சரிந்துள்ளது.

இது செப்டம்பர் மாதம் மற்றொரு வட்டி விகிதக் குறைப்புக்கான எதிர் பார்ப்புகளை உறுதிப்படுத்துகிறது.



# ஒன்ராரியோவில் வீடமைப்புத் தொடர்பான புதிய திட்டமிடல் விதிகள் நேற்று அறிவிப்பு

## மாகாண வீட்டுவசதி அமைச்சர் போல் கெலன்ரா வெளியிட்டார்

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 21

ஒன்ராரியோ மாகாணத்தின் வீடமைப்பு தொடர்பான புதிய திட்டமிடல் விதிகளை மாகாணத்தின் வீட்டுவசதி அமைச்சர் போல் கெலன்ரா நேற்று அறிவித்தார்.

ஒன்ராரியோவின் மாநகர சபைகளுக்கான கூட்டமைப்பு மாநாட்டில் கலந்து கொண்ட போல் கெலண்ட்ரா புதிய மாகாண திட்டமிடல் அறிக்கையை அறிவித்தார்.

இது அவர்களுக்கு கூடுதல் கருவிகள் மற்றும் நெகிழ்வுத்தன்மையை வழங்கும் என்று கலந்துகொண்ட நகராட்சி தலைவர்களிடம் கூறினார்.

'இது மாகாணம் முழுவதும் ஒரு நிலையான திட்டமிடல் திசையை உறுதி செய்யும்,' என்று அவர் கூறினார்.

'வீடுகளைக் கட்டும் போது நகராட்சிகள் உள்ளூர் சவால்கள் மற்றும் முன்னுரிமைகளைப் புரிந்துகொள்வதையும், ஒன்ராரியோவில் நாம் கண்ட முன்னோடியில்லாத வளர்ச்சியை நிவர்த்தி செய்ய எங்கு, என்ன வகையான வீடுகள் தேவை என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள் என்பதையும் இது அங்கீகரிக்கிறது' என அவர் தெரிவித்துள்ளார்.

2031 ஆம் ஆண்டிற்குள் 1.5 மில்லியன் வீடுகளை கட்டுவதற்கான மாகாண கன்சர்வேட்டிவ் அரசாங்கத்தின் உறுதிமொழியை பூர்த்தி செய்வதற்கு தேவையான வீடு கட்டும் வேகத்தில் ஒன்ராரியோ மாகாணம் பின்தங்கியுள்ளது என சுயாதீன கண்காணிப்பாளர்களின் அறிக்கையின் மத்தியில் அமைச்சரின் புதிய விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.



# தற்காலிக வெளிநாட்டு பணியாளர் திட்டம் மொன்றியால் பகுதியில் இடை நிறுத்தம்!

கனடாவில் மொன்றியால் பகுதியில் தற்காலிக வெளிநாட்டு பணியாளர் திட்டம் இடைநிறுத்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக குறைந்த ஊதியம் வழங்கப்படும் தொழில்களுக்கான வெளிநாட்டு பணியாளர் முறை இவ்வாறு தற்காலிக அடிப்படையில் இடை நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் முதல் இந்த இடைநிறுத்தம் அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மணித்தியாலம் ஒன்றுக்கு 27.47 டொலர்களுக்கு குறைவான ஊதியம் வழங்கும் தொழில்களுக்கு இவ்வாறு தடை விதிக்கப்பட உள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மாகாண முதல்வரும் குடிவரவு அமைச்சரும் தங்களது நிலைப்பாட்டை வெளியிட உள்ளனர்.



# குரங்கம்மை நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த ஆப்பிரிக்க நாடுகளுக்கு கனடா உதவி வழங்கும்

## வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி அறிவிப்பு

குரங்கம்மை நோயினால் பாதிக்கப்பட்டுள்ள ஆப்பிரிக்க நாடுகளுக்கு நிதி உதவி அளிக்கப்படும் என கனடிய மத்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

கனடிய வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி இது தொடர்பிலான அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

குரங்கமை நோயை கட்டுப்படுத்துவதற்காக ஒரு மில்லியன் டாலர்கள் உதவியாக வழங்கப்பட உள்ளது.

நேரடியாக ஆப்பிரிக்காவிற்கு இந்த நிதி உதவி வழங்கப்படாது எனவும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஊடாக உதவி வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குரங்கம்மை என்று அழைக்கப்படும் இந்த நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த நிதி உதவி வழங்கப்படுகிறது.

குரங்கமை நோய் தடுப்பூசிகளை ஏற்றுவதற்கு உதவி அளிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மெலனி ஜோலி இன்றைய தினம் தென்னாபிரிக்காவிற்கான அதிகார பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ள உள்ளார்.

ஜோலி இரண்டு நாள்கள் தென்னாப்பிரிக்காவில் தங்கி இருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார விவகாரங்கள் உள்ளிட்ட பல்வேறு இருதரப்பு உறவுகள் குறித்து இந்த விஜயத்தின் போது கவனம் செலுத்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.






# கனடாவில் இடம்பெற்ற விபத்தில் அதிசயமாக உயிர் பிழைத்தவர்கள்

கனடாவின் ரொறன்ரோவின் கிரீக்டவுன் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிலர் அதிசயமாக உயிர் தப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தை நேரில் பார்த்த பெண் ஒருவர் விபத்து குறித்து விவரித்துள்ளார். விபத்தில் சிக்கியவர்கள் மிக அரிதான வகையில் உயிர் தப்பி உள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாகனம் கட்டுப்பாட்டை இழந்து அருகாமையிலிருந்து கம்பம் ஒன்றில் மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்தின் போது வாகனத்தின் சாரதியும், சக பயணிகளும் வாகனத்திலிருந்து தூக்கி எறியப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சன நெரிசல் மிக்க வீதியில் தூக்கி எறியப்பட்டவர்கள் மீது வேறும் வாகன னங்கள் மோதியிருந்தால் உயிர் சேதம் ஏற்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும், தூக்கி எறியப்பட்ட நபர்களில் இருவர் தாமாகவே எழுந்து நடந்து செல்லக் கூடிய நிலையில் இருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனை ஓர் அதிசயம் என்று கூற முடியும் என அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

விபத்தில் காயம் அடைந்த ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.




# சரக்கு ரயில் சேவைகள் நாளையுடன் முடங்கும்!

நாளை வியாழக்கிழமை முதல், கனடாவில் ரயில்வே ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளார்கள்.

கனடா முழுவதிலும், சரக்கு ரயில்களை இயக்கும் சுமார் 9,000 ரயில்வே ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட திட்டமிட்டுவருகிறார்கள்.

இதனால், சரக்கு ரயில் போக்குவரத்து ஸ்தம்பிக்கும் நிலை உருவாகியுள்ளது.

ஆனால், இப்படி ரயில்வே ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்வதால் ஏற்படும் இழப்பு, கனேடியர்கள் மீது தான் சுமத்தப்படும் என பெடரல் அரசு எச்சரித்துள்ளது.

ரயில்கள், நாளொன்றிற்கு ஒரு பில்லியன் டொலர்கள் மதிப்புடைய பொருள்களைச் சுமந்து செல்கின்றன. நாட்டின் ஏற்றுமதியில் பாதி ரயில்கள் மூலமாகத்தான் நடந்துவருகிறது.

ஆக, ரயில்வே ஊழியர்கள் வேலை நிறுத்தம், கனேடிய பொருளாதாரத்தை பெருமளவில் பாதிக்கும் என தொழில்துறையினரும் எச்சரித்துள்ளார்கள்.

என்றாலும், தங்கள் கோரிக்கைகள் சந்திக்கப்படவில்லையானால், எந்த முன்னேற்றமும் ஏற்பட வாய்ப்பில்லை என ரயில்வே ஊழியர்கள் யூனியன் கூறிவிட்டது.

இந்த முடக்கத்தினால் தூர ரயில் சேவைகளைப் பயன்படுத்தும் சுமார் 32 ஆயிரம் பயணிகளும் தினசரி பாதிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப் படுகின்றது.





# வான்கூவர மாடியில் இருந்து விழுந்து இருவர் மர்ம மரணம்

கனடாவின் வடக்கு வான்கூவார் பகுதியில் நேற்று மாடியிலிருந்து விழுந்து இருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளனர்.

பெண் ஒருவரும் பாடசாலை செல்லும் வயதுடைய சிறுமி ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உயர் அடுக்கு மாடி ஒன்றின் பல்கனியிலிருந்து இந்த இருவரும் கீழே விழுந்து உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் அறிந்து கொண்ட பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

தீயணைப்பு படையினர் மற்றும் உயிர் காப்பு உதவியாளர்கள் காயமடைந்த நிலையிலிருந்த இருவரின் உயிரையும் மீட்க முயற்சித்த போதும் அந்த முயற்சி வெற்றி அளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்திலேயே இருவரும் உயிரிழந்து விட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் பல்வேறு கோணங்களில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடவியல் நிபுணர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டு விசாரணை நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தினால் பொது மக்களுக்கு பொதுமக்களின் பாதுகாப்புக்கு ஆபத்து கிடையாது என பொலிஸெ தெரிவித்துள்ளனர்.



